கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 117 /2009

தேதி : 22.06.2022

(வா.சா.–1) – சாந்தி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை : (2–ம் பிரதிவாதி தரப்பில்)

15.2.1995 தேதிய பாக பிரிவினை ஆவணத்தின்படி ஏ இலக்கமிட்ட சொத்துக்கள் S.R.முருகவேல் செட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யான வழக்கு என்பதாலும் எனக்கு வழக்கு சங்கதிகள் எதுவும் நேரடியாக தெரியாது என்பதாலும் நான் பொய்யாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . பூர்வீக சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானத்தை வைத்து முருகவேல் செட்டியார் பி இலக்க சொத்தை 18.10.1974 தேதிய கிரைய ஆவணத்தின் படியும் சி மற்றும் டி இலக்கச் சொத்துக்களை நாளிட்ட கிரைய ஆவணம் படியும் கிரையம் பெற்றதாக சொல்வது சம்மந்தமாக அதற்கான ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை. உண்மையில் மேற்படி சொத்துக்கள் அனைத்தும் முருகவேல் செட்டியாரின் சொந்த மற்றும் சுய வருமானத்தில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல . பூர்வீக சொத்திலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு அந்தச் சொத்துக்களை அவர் கிரையம் பெற்றதாக நான் சொல்வது உண்மையல்ல என்றும் அதனால் தான் அதற்கான எந்த ஆவணங்களையும் என்னால் முன்னிலைப்படுத்த முடியவில்லையென்றும் சொன்னால் சரியல்ல . மேற்படி முருகவேல் செட்டியாரும் அவரது மகன்களான மனோகரன் மற்றும் ராஜேந்திரம் ஆகிய மூவரும் இந்து பொது குடும்பமாக இருந்து சொத்துக்கள் அனைத்தையும் பொதுவில் பயன்படுத்தி வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி முருகவேல் செட்டியார் அவரது பெயரிலும் அவரது மகளை திருமணம் செய்து கொடுத்த குடும்பத்தினர் பெயரிலும்

கூட்டாக சொத்துக்கள் வாங்கினால் அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் சிறப்பான மற்றும் லாபகரமான எதிர்காலம் அமையும் என்று ஜோதிடர் முருகவேல் செட்டியாருக்கு அறிவுறுத்தினார் என்றால் சரியல்ல . அதன் காரணமாகத் தான் முருகவேல் செட்டியாரின் சம்மந்தி பழனி செட்டியாரின் மறுமகளான சூடாமணி, வெள்ளத்தாய், சரஸ்வதி மற்றும் முருகவேல் செட்டியாரின் மகளான செல்லம்மாள் என்ற செல்லக்கன்னு ஆகிய 4 நபர்களின் பெயரிலும் தலா 2.15 1/4 ஏக்கர் நிலத்தினை 19.10.1974 அன்று ஆவண எண்.847, 848, 849, மற்றும் 850/1974 ஆக ஆகிய ஆவணங்களின் படி முருகவேல் செட்டியார் அவரது சொந்த வருமானத்தில் கிரையத் தொகை முழுவதும் செலுத்தி மேற்படி 4 நபர்களின் பெயரில் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல . முருகவேல் செட்டியார் 18.10.1974 தேதிய ஆவண எண்.852/1974 ஆவணத்தின்படி தனது சொந்த வருமானத்திலிருந்து அவரது பெயரில் 4.30 1/2 ஏக்கர் நிலத்தை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல . அதே போல் முருகவேல் செட்டியார் அவரது மகன்களான மனோகரன் மற்றும் ராஜேந்திரன் பெயரிலும் தலா 2.15 1/4 ஏக்கர் நிலத்தினை 18.10.1974 அன்று ஆவண எண். 851 மற்றும் 852/1974 ஆக ஆகிய ஆவணங்களின் படி முருகவேல் செட்டியார் அவரது சொந்த வருமானத்தில் கிரையத் தொகை முழுவதும் செலுத்தி மேற்படி 2 நபர்களின் பெயரில் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் ராஜேந்திரன் தனது சொந்த வருமானத்தில் இருந்து தான் கிரையம் பெற்றார் . முருகவேல் செட்டியாரின் சம்மந்தி பழனி செட்டியாரின் மறுமகளான சூடாமணி , வெள்ளத்தாய், சரஸ்வதி மற்றும் முருகவேல் செட்டியாரின் மகளான செல்லம்மாள் என்ற செல்லக்கன்னு ஆகிய 4 நபர்கள் மற்றும் முருகவேல் செட்டியாரின் மகன்களான மனோகரன் மற்றும் ராஜேந்திரன் ஆகிய அனைவரின் பெயரளவில் மட்டுமே கிரைய ஆவணங்கள் பெறப்பட்டது என்றும் மேற்படி அனைத்து நபர்களும் முருகவேல் செட்டியாரின் பெயரளவிலான பினாமிகள் என்றும் சொன்னால் சரியல்ல . மேற்படி அனைத்து சொத்துக்களுமே மேற்படி கிரைய ஆவணங்கள் மூலமாக முருகவேல் செட்டியார் அவர்களின் முழு பயன் பாட்டிற்கும் அவரது சொந்த

நலனிற்காகவும் மட்டுமே பெறப்பட்டது என்றால் சரியல்ல . மேலும் பழனி செட்டியாரின் மருமகள்களுக்கும் முருகவேல் செட்டியாரின் மகள் மற்றும் மகன்களின் எந்த ஒரு பயன்பாட்டிற்காகவோ அல்லது நலனுக்காகவோ மேற்படி சொத்துக்கள் கிரையம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல . இந்த வழக்கில் பொது குடும்பச் சொத்து என்று நான் கூறியிருப்பதே முற்றிலும் தவறான சங்கதிகள் என்றும் வழக்கு சொத்தில் பொது குடும்பச் சொத்து என்பதே கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல . முருகவேல் செட்டியார் அவரது பங்கைப் பொறுத்து எந்த ஒரு ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்து விட்டார் என்று வழக்கிற்காக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல . முருகவேல் செட்டியார் இறப்பதற்கு முன்பாக 19.3.1997 தேதியில் பதிவு செய்யத்தக்க உறையிட்ட உயில் ஆவணத்தை நிறைவேற்றி இருக்கிறார் என்றால் சரியல்ல . மேற்படி உயில் ஆவணம் முருகவேல் செட்டியாரின் இறப்பிற்கு பிறகு அவரது இறப்பினை ஆவணங்கள் வாயிலாக மாவட்ட பதிவாளார் அவர்கள் உறுதி செய்து 16.12.2002 தேதியில் மேற்படி உயில் ஆவணத்தை ஆவண எண்.70/2002 ஆக பதிவு செய்துள்ளார் என்றால் அவ்வாறு மோசடியாக பதிவு செய்துள்ளார்கள் . அந்த உயில் ஆவணத்தைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் என்றால் நீதிமன்றத்தில் வழக்கு வந்த பிறகு தான் அது பற்றி எனக்குத் தெரியும் . மேற்படி உயில் ஆவணத்திலேயே மேற்படி முருகவேல் செட்டியார் தன்னுடைய சொந்த வருமானத்திலிருந்து தான் மேற்படி கிரையங்களை பெற்றதாக தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அந்த உயில் ஆவணமே மோசடியான ஆவணமாகும் . என்னுடைய கணவர் ராஜேந்திரன் உயிரோடு இருக்கும் காலத்தில் முருகவேல் செட்டியார் என் கணவருக்கு பல முறை பணம் கொடுத்து உதவி செய்துள்ளதாகவும் அவர் இறந்த பிறகும் அவரது மனைவியான எனக்கும் என்னுடைய மகளான 2-ம் வாதிக்கும் என்னுடைய தகப்பனாரான அப்பாசாமி என்ற சண்முகம் அவர்களிடம் பராமரிப்பு தொகையாக ரூ . 7 இலட்சம் கொடுத்து வைத்திருப்பதாகவும் மேற்படி முருகவேல் செட்டியார் மேற்படி அவரது உயிலில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அந்த ஆவணத்தில் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அந்த உயில்

ஆவணம் மோசடியான ஆவணமாகும். மேற்படி உயில் ஆவணமும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளும் முற்றிலும் உண்மை என்பது எனக்கு நன்கு தெரியும் என்றும் அதனை ஒப்புக் கொண்டால் என்னுடைய பொய்யான வழக்கிற்கு அது பாதகமாகிவிடும் என்பதால் பதிவு செய்யப்பட்ட அந்த ஆவணத்தை மோசடியானவை என்று பொய்யாக மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் தான் அந்த உயில் ஆவணத்தை மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் பெயரில் உள்ள கிரைய ஆவணத்திற்கான முழு கிரையத் தொகையையும் முருகவேல் செட்டியார் செலுத்திய காரணத்தினாலும் என் கணவர் மேற்படி முருகவேல் செட்டியாரின் பினாமி என்பதாலும் என் கணவரின் வாரிசு என்ற முறையில் இந்த வழக்கின் வாதிகளுக்கும் என் கணவரின் தாயாருக்கும் எந்த ஒரு பங்கும் பாத்தியமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல . மேற் சொன்ன வகையில் என் கணவருக்கு சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லை என்பதால் அவரது வாரிசு என்று என் கணவரின் தாயார் ரத்தினம் , எனது மகள் சுஜிதா அவர்களுக்கு 9.6.2010 தேதியில் எழுதி வைத்ததாக சொல்லும் தான செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல . சூடாமணி மற்றும் வெள்ளத்தாய் ஆகியோர் இந்த வழக்கின் டி அட்டவணை சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை கோரி திண்டுக்கல் 1–வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அ.வ.எண்.1/2007 ஆக நிலுவையில் உள்ளது என்றால் சரிதான் . அந்த வழக்கில் நானும் எனது மகளும் பிரதிவாதிகளாக தரப்பினராக இருக்கிறோம் என்றால் சரிதான் . மேற்படி வழக்கை நான் இன்று வரை ஆஜராகி நடத்தி வருகிறேன் . மேற்படி சொத்துக்களைப் பொறுத்து ஏற்கனவே ஒரு வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள போது அதில் நான் தரப்பினராக இருந்து வழக்காடி வரும் நிலையில் அந்த வழக்கை முற்றிலுமாக மறைத்து அதே சொத்துக்களைப் பொறுத்து இந்த நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு தாக்கல் செய்வது என்பது சட்டப்படி தடை செய்யப்பட்டது என்றால் சரியல்ல . இந்த வழக்கின் சொத்து விவரத்தில் சில சொத்துக்கள் விடுபட்டு போய் விட்டது என்றும், விடுபட்ட

சொத்துக்களைப் பொறுத்து சொத்து விவரத்தில் சேர்க்க வேண்டுமென்றும் வழக்குரையை திருத்தம் செய்ய இ.ம,எண்.452/2010 மனு எனது தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை . அவ்வாறு நான் ஒரு மனு தாக்கல் செய்தேன் என்றும் அந்த மனுவானது 25.8.2016 தேதி இந்நீதிமன்றத்தால் முழு பரிசீலனைக்குப் பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் அது எனக்கு நன்கு தெரிந்திருந்தும் தற்போது ஞாபகம் இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி உத்தரவை எதிர்த்து நான் எந்தவித மேல்முறையீடும் செய்யாத காரணத்தினால் அந்த உத்தரவு இறுதி நிலையை அடைந்து விட்டது என்றால் மேற்படி உத்தரவு பற்றி எனக்குத் தெரியாது . இந்த வழக்கு முற்றிலும் பொய்யானது என்பதால் தான் வழக்கின் சங்கதிகள் எனக்கு முழுமையாக தெரியவில்லை என்றால் சரியல்ல . வாதத்திற்காக இந்த வழக்கை ஏற்றுக் கொண்டாலும் கூட இந்த வழக்கானது பகுதி பாகப்பிரிவினை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . மேற்படி முருகவேல் செட்டியார் நிறைவேற்றிய உயில் ஆவணத்தின்படி இந்த வழக்குச் சொத்துக்களான A,B,C,D சொத்துக்கள் அனைத்தும் முருகவேல் செட்டியாரின் மகன் மனோகரனுக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல . மேற்படி சொத்துக்களும் மனோகரன் எழுதி வைத்த உயில் ஆவணத்தின்படி இந்த வழக்கின் 2–ம் பிரதிவாதி மற்றும் அவரது மகள்களுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . மேற்படி முருகவேல் செட்டியார் நிறைவேற்றிய உயில் ஆவணம் மற்றும் மனோகரன் நிறைவேற்றிய உயில் ஆவணம் ஆகியவை முறையே அவர்களது இறப்பிற்கு பின்னிட்டு அமலுக்கு வந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . இன்று வரை இந்த வழக்குச் சொத்துக்களும் 2–ம் பிரதிவாதி மற்றும் அவரது மகள்கள் ஆகியோரின் சுவாதின அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. திண்டுக்கல், 1–வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் பாகப்பிரிவினைக்காக சூடாமணி மற்றும் வெள்ளத்தாய் ஆகியோரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பிறகு அதிகப்படியான சொத்துக்கள் வேண்டுமென்ற கெட்ட நோக்கத்துடன் மேற்படி சங்கதிகளை மறைத்து

இந்த வழக்கை பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குச் சொத்துக்கள் என்னுடைய கூட்டு சுவாதீன அனுபவத்தில் இருப்பதாகவும் அந்த கூட்டு சுவாதீன அனுபவத்திற்கு இந்த வழக்கின் பிரதிவாதிகள் இடையூறு விளைவிப்பதாகவும் இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து எந்த ஒரு கூட்டு சுவாதீனமும் கிடையாது என்றால் சரியல்ல.

(2–ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

ஒம்/–ஜெ.ஜெயசுதாகர்,
கூடுதல் சார்பு நீதிமன்றம்,
பழனி.